


எந்த ஒரு தீவிரவாத இயக்கத்துக்கும் இருக்கிற மிகப்பெரிய பிரச்னை, தன்னை மற்றவர்கள் கவனிக்கச் செய்வது. இதற்காகத்தான் அவர்கள் கொலை செய்கிறார்கள். ஆள் கடத்துகிறார்கள். டமால் டுமீல் அதிரடிகள் அரங்கேற்றப்படுகின்றன. கடத்தல், கொள்ளையெல்லாம் ஜீவாதாரப் பிரச்னைகளுக்கு. செயல்படப் பணம் வேண்டாமா?

இந்த இரண்டு விதமான நடவடிக்கைகளுக்கும் பொதுவான ஒரு காரணம் என்று வரும்போது, அங்கே கொள்கை, கோஷம், லட்சியம், கனவு, சித்தாந்தம், வேதாந்தம் எல்லாம் வரும்.

இ.டி.ஏ.வைப் பொறுத்தவரை கொலை, கொள்ளை விவகாரங்களை அவர்கள் லட்சியப்பாதையின் படிக்கற்களாக வைத்துவிட்டார்கள். இருப்பவர்களிடம்தானே அடிக்கிறோம்? என்ன தப்பு? என்று கேட்டுவிட்டுப் போயே விடுவார்கள். இன்றைய தேதியில் இ.டி.ஏ.வின் உலகளாவிய நெட் ஒர்க் செயல்படுவதற்கு ஒரு நாளைக்கு 90,000 யூரோக்கள் செலவு பிடிக்கிறது என்று ஒரு கணக்கு எடுத்திருக்கிறார்கள். செயல்படுவதற்கு என்றால், சாப்பிடுவது தொடங்கி, நித்யகர்மானுஷ்டானங்கள் வரைக்கும். ஒரு நாளைக்குத் தொண்ணூறாயிரம் என்றால் ஒரு மாதத்துக்கு? வருடத்துக்கு? வாழ்நாளுக்கு?

இதையெல்லாம் கற்பனை பண்ணிப் பார்த்தால் சன் ஸ்டிரோக் வந்துவிடும். இதற்கு மேலே ஒரு யூரோ என்பது ஒரு அமெரிக்க டாலரைக் காட்டிலும் ஒசத்தி என்பதையும் சேர்த்துக் கற்பனை செய்தால், திரும்ப எழுந்திருக்க முடியாது.

ஆகவே இருப்பவர்களிடம் கொள்ளை அடிப்பது என்பதை ஆத்ம சுத்தியுடன் செயல்படுத்த இ.டி.ஏ. எழுபதுகளின் தொடக்கத்திலேயே முடிவு செய்துவிட்டது. அவர்களுக்கு தினசரி செய்வதற்குக் காரியங்கள் இருந்தன. பாஸ்க் மாகாணத்திலும் மாட்ரிட், பார்சிலோனா போன்ற முக்கிய நகரங்களிலும், மத்திய தரைக்கடல் ஓரத்துச் சுற்றுலாப் பிரதேசங்கள் அனைத்திலும் அவர்கள் எப்போதும் செயல்பட்டுக்கொண்டே இருக்க விரும்புகிறவர்கள்.

செயல்பாடு என்றால் கொலைகள். அல்லது குண்டுவெடிப்புகள். முன்பெல்லாம் தனிநபர் ஒழிப்புத் திட்டங்களில் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தது இ.டி.ஏ. ரோடில் போய்க்கொண்டிருக்கும் யாரோ ஒரு பிரகஸ்பதியைக் கூப்பிட்டு நிறுத்தி ஹலோ சொல்லி, கை கொடுத்து, துப்பாக்கி எடுத்து நெற்றிப்பொட்டில் வைத்துச் சுட்டுவிட்டு, ஊதியபடி போய்விடுவார்கள்.

யார் அந்த ஆசாமி? எதற்குச் சுட்டார்கள், முன்பகை என்ன, பின்கதை என்ன? இன்னோரன்ன விவரங்களெல்லாம் மறுநாள் தொடங்கி ஒரு வார காலத்துக்கு நியூஸ் பேப்பரில் தவணை முறையில் வெளியிடப்படும். இ.டி.ஏ. கொல்லும் நபர்கள் பெரும்பாலும் அரசாங்க முக்கியஸ்தர்களாக இருப்பார்கள். அல்லது ராணுவ உயரதிகாரிகளாக இருப்பார்கள். பெரும்பாலும் மக்கள் பிரதிநிதிகளை ஒன்றும் செய்யமாட்டார்கள். விதிவிலக்காக ஒன்றிரண்டு சம்பவங்களும்

இருக்கின்றன.

அப்படித்தான் ஒரு சமயம் க்ரெகோரியோ ஆர்டனொஸ் (Gregorio Ordonez) என்கிற ஒரு எம்.பி. அடையாளமே தெரியாதபடிக்கு அடித்துக் கொன்று வீசப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து, நல்லடக்கம் பண்ணிவிட்டு புலன் விசாரிக்க ஆரம்பித்தார்கள். இ.டி.ஏ. பொதுவாக எம்.பிக்களைக் குறி வைப்பதில்லை என்பதால், அவர்களை விட்டுவிட்டு மற்ற அரை டிக்கெட்டுகளைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். இருபது, இருபத்தைந்து தினங்களில் ஸ்பெயினிலும் பிரான்சிலுமாக மொத்தம் எண்பது பேர் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

இ.டி.ஏ.வுக்குச் சகிக்கவில்லை. உடனடியாக Egin என்கிற ஸ்பானிஷ் பத்திரிகைக்கு ஒரு போன் போட்டுப் பேசினார்கள். 'இந்தா பாருய்யா, நான்தான் கொன்னேன். இப்ப என்னாங்கறாங்க? பொழுது போலைன்னா ஊர்ல ஆடு மேய்ச்சிக்கிட்டிருக்கறவனையெல்லாம் புடிச்சி உள்ள தள்ளிடுவானுகளாமா? தொலைச்சிப்புடுவேன் படுவா. சொல்லி வையி உங்க கவர்மெண்டாண்ட. எம்.பி.ங்கள ஏன் நாங்க டார்கெட் பண்றதில்லன்னா, அவங்க மக்களுக்காகப் பேசுறவங்கன்றதாலதான். ஆனா அவங்களும் எதாச்சும் கேப்மாறித்தனம் பண்ணாங்கன்னா இதான் கதி. வெச்சிடவா? ஆங், அப்பால ஒரு விஷயம். இந்தாளு செத்தானே, இவன் என்னா காரியம் பண்ணான்னு ஒரு கேள்வி வருதா? உங்க கவர்மெண்டாண்ட சொல்லி தோண்டிப் பார்க்கச் சொல்லு. வரட்டா?

ஆனால் தொண்ணூறுகளுக்குப் பிறகு இ.டி.ஏ. நேரடிக் கொலைகளில் ஈடுபடுவதை நிறுத்திக் கொண்டுவிட்டது. வி.ஐ.பி.களைத் தாக்க அனுப்பும் கமாண்டோ படை வீரர்களின் உயிர்கள் அநாமத்தாக வீணாகிறது என்று இதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

'ஒவ்வொரு வீரருக்கும் பயிற்சி கொடுக்க நாங்கள் குறைந்தது ஆறு லட்சம் யூரோக்கள் செலவிடுகிறோம். அவர்கள் குடும்பத்துக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. ஒரு கிரிமினலைக் கொல்வதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட ரத்தினங்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை' என்று, 1993 டிசம்பர் 4-ம் தேதி வெளியிடப்பட்ட இ.டி.ஏ.வின் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்றிலும் பாதுகாப்பான, சௌகரியமான தாக்குதல் உத்தி, கார் குண்டுகள்தான் என்று அதே காலகட்டத்தில் அவர்கள் தீர்மானித்தார்கள். ஒன்று மாட்ரிட்; அல்லது பார்சிலோனா. பெரும்பாலும் இந்த இரு இடங்களில்தான் நிகழ்த்துவார்கள். சில சமயம் திடீரென்று. சில சமயம் முன்னறிவிப்புடன். முன்பு பார்த்த Egin îMó, Gara, Egunkariya போன்ற சில ஸ்பானிஷ் செய்தித்தாள்களுடன் இ.டி.ஏ.வுக்கு நல்லுறவு இருக்கிறது. நல்லுறவு என்றால், இவர்கள் கொடுக்கும் அறிக்கைகளை அவர்கள் வெளியிடுவார்கள் என்கிற உறவு. அல் காயிதாவுக்கு ஒரு அல் ஜசீரா மாதிரி என்று வைத்துக்கொள்ளுங்கள்.

நீட்டாக ரிப்போர்ட் எழுதி ஃபேக்ஸ் செய்துவிடுவார்கள். அல்லது தொலைபேசியில் எடிட்டர்களை அழைத்து 'நீ சௌக்கியமா, நான் சௌக்கியம்' என்று நாலு வரி குசலம் பேசிவிட்டு தகவலை நேரடியாகச் சொல்லிவிடுவது. அதுவும் இல்லாவிட்டால் கூரியரில் குண்டு வைக்கிற தகவல். ஒன்றிரண்டு தருணங்களில் அந்தப் பத்திரிகை நிருபர்களையே தலத்துக்கு நேரில் வரவைத்துக் காரியம் நிகழ்த்தியதும் உண்டு. இதையெல்லாம் பின்னால் பார்க்கலாம். இப்போது என்ன செய்கிறார்கள், எப்படிச் செய்கிறார்கள் என்பதை மட்டும் அறிமுகம் செய்துகொண்டுவிடுவோம்.

இ.டி.ஏ.வுக்கு ஆர்.டி.எக்ஸ் சம்பந்தம் அதிகம் கிடையாது. தனது சரித்திரத்தில் இதுவரை மூன்று முறை மட்டுமே அவர்கள் ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பொதுவாக கார் குண்டு வைப்பதற்கு அவர்கள் விரும்பும் வெடிபொருளின் பெயர் கோமா-2 (Goma – 2) என்பது.

தொழிற்சாலை உபயோகங்களுக்காகப் பயன்படும் வேதிப்பொருள் இது. பெரும்பாலும் சுரங்கங்கள் தோண்டுவதற்குப் பயன்படும். கொஞ்சம் ஜெலட்டின் மற்றும் நைட்ரோக்ளைகோல் (Nitroglycol) என்னும் வேதிப்பொருளைக் கலந்து தயாரிப்பது. இதில் கோமா-2 EC, கோமா-2 ECO என்று இரண்டு ரகம் உண்டு. தாக்கப்படும் இலக்கின் தன்மை, உறுதி, கட்டுமானம், முக்கியத்துவம் ஆகியவற்றைக் கொண்டு இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுப்பார்கள். 1980-ல் தொடங்கி 1994 வரை இ.டி.ஏ.வின் தேசிய வெடிகுண்டாக இந்த கோமா-2தான் இருந்திருக்கிறது. இப்போதும் உண்டு என்றாலும் இன்னும் நவீன ரகங்கள் பல புழக்கத்தில் வந்துவிட்டதால், தமது சொந்தத் தயாரிப்புகளை அவர்கள் சில வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பொருள் ஈட்டும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். (குறிப்பாக கிழக்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த தீவிரவாத இயக்கங்கள் இ.டி.ஏ.விடமிருந்து கோமா-2ஐ இன்றும் இறக்குமதி செய்துகொண்டிருக்கின்றன.)

மார்ச் 11, 2004 அன்று மாட்ரிட் நகரில் நிகழ்த்தப்பட்ட தொடர் ரயில் குண்டுத் தாக்குதல்கள் நினைவிருக்கிறதா? இதே கோமா-2 தான்! இதே இ.டி.ஏ.தான் அதற்கும் சப்ளை செய்தது. இதைப் பிறகு பார்க்கலாம். இப்போதைக்கு நினைவில் குறித்துக் கொள்ளுங்கள்.

ஆச்சா? குண்டு பஞ்சாயத்து ஓவர். அடுத்தது ராக்கெட் பலம். இ.டி.ஏ.வுக்கு என்று தனியொரு ராக்கெட் உண்டு. ராக்கெட் லாஞ்சர்களும் அவர்களே தயாரிக்கிறார்கள். இதற்காக இரண்டொரு ஃபேக்டரிகளும் கட்டி நடத்துகிறார்கள். ராணுவம் மற்றும் காவல் துறை இலக்குகளைத் தாக்குவதற்கு மட்டும் பொதுவாக அவர்கள் ராக்கெட்டுகளைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆனால், படு ப்ரில்லியண்டாக ஒரு காரியம் செய்கிறார்கள். தொழிற்சாலைதான் இருக்கிறதே என்று தயாரித்து அடுக்கிக் கொண்டு விடுவதில்லை. ஒரு ரெய்டு, தாக்குதல் என்று வந்தால் அத்தனையும் கோவிந்தா அல்லவா? எனவே, மேகி நூடுல்ஸ் மாதிரி ரெண்டே நிமிஷத்தில் ராக்கெட் தயாரிக்கும் தொழில்நுட்பம் ஒன்றை இ.டி.ஏ. தனக்கெனப் பிரத்தியேகமாக வடிவமைத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு தாக்குதல் உத்தேசிக்கப்படுகிறது என்றால், முதல் நாள் ராத்திரிதான் ஃபேக்டரிக்கு விஷயம் போகும்.

'எலேய், கோயிஞ்சாமி, நாளைக்கி ராயபுரம் சம்சாரி குப்பத்தாண்ட திருவிழாவாம்டா. நாலு பொட்டி ராகிட்டு, ரெண்டு பொட்டி கேப்பு, மூணு பொட்டி குருவிவெடி வோணுமாம். தலைவர் சொல்லிவுட்டு அனுப்பியிருக்காரு.'

'சர்தாண்ணே. சரக்கு நேரா குப்பத்துக்கு வந்துரும்னு சொல்லிடுங்க. நம்ம செல்வத்தாண்ட சொல்லி ஆட்டோ அனுப்பிற சொல்லுங்க.'

இரவு முழுக்க டீட்டி பார்த்து வேண்டிய சரக்குகளைத் தயார் செய்து உரிய இடத்துக்கு, உரிய நேரத்தில் கொண்டு சேர்க்க வேண்டியது ஃபேக்டரி மேலாளரின் கடன். திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய கமாண்டோக்கள் நேராக ஜீப்பில் போய் இறங்கிவிடுவார்கள். ஆயுதம் அங்கே தயாராக இருக்கும். எடுத்து அடித்துவிட்டு, மீண்டும் ஜீப்பில் ஏறி வந்துவிட வேண்டியதுதான் பாக்கி.

தீவிரவாதம் ஒரு கார்ப்பரேட் ஆகிவிட்ட காலம் இது. இ.டி.ஏ. அதில் முன்னணியில் இருக்கும் அமைப்புகளுள் ஒன்று. கதை போலத் தோன்றலாம். உண்மையில் கதையல்ல. சுதந்திரம் என்கிற ஒற்றைச் சொல் மந்திரத்தை வைத்துக் கொண்டு, கடந்த நாற்பதாண்டு காலத்துக்கு மேலாக ஸ்பெயினின் நிரந்தரத் தலைவலியாக இருக்கிற அமைப்பு இது.

தனது செலவுகள் குறித்து இ.டி.ஏ. கவலைப்படுவதே இல்லை. ஒரு நாளைக்குத் தொண்ணூறாயிரம் யூரோக்கள். பார்த்தோமல்லவா? எப்படி வரும்? எங்கே காய்க்கும்?

அவர்கள் பெரும்பாலும் நம்புவது வரிகளைத்தான். அரசாங்கம் வசூலிக்கும் வரியல்ல. இ.டி.ஏ. தனிப்பட்ட முறையில் வசூலிக்கும் நிதி அது.

எல்லா இயக்கங்களிலுமே இந்த வரி வசூல் என்பது ஓரளவு உண்டு. சில இடங்களில் மக்களே விரும்பி இயக்கங்களுக்கு நிதி அளிப்பார்கள். சில இடங்களில் கட்டாய வசூல் இருக்கும். இ.டி.ஏ. விஷயத்தில் இரண்டும் உண்டு.

பாஸ்க் மொழி மாகாண மக்கள் கண்டிப்பாக இ.டி.ஏ.வுக்குக் கப்பம் கட்டியாகவேண்டும். வருமானத்தில் ஐந்து சதவிகிதம். தவிரவும் ஸ்பெயினில் பிற பகுதிகளிலும் வரி வசூல் பிரிவுகளை நிறுவியிருக்கிறார்கள். அனுதாபிகள் விஷயத்தில் பிரச்னை ஏதுமில்லை. அவர்களே முன்வந்து நிதியளித்துவிடுவார்கள். இ.டி.ஏ.வுக்குச் சிக்கல் தரும் ஏரியா, தொழிலதிபர்களும் தொழிற்சாலைகளும்.

அவர்கள் அதிகம் நிதி எதிர்பார்க்கும் இடம் அதுதான். ஸ்பெயினில் உள்ள ஒவ்வொரு பெரிய கார்ப்பரேட்டிலும் இ.டி.ஏ.வுக்கு என்று ஒரு கணக்கு உண்டு. வருடம் பிறந்தால் முதல் மொய்ப்பணத்தை அவர்களுக்கு எழுதிவிட வேண்டும். சிலர் ஒழுங்காகச் செய்துவிடுவார்கள். சிலர் இழுத்தடிப்பார்கள். அல்லது வசூலிக்க வருபவர்களை போலீஸில் மாட்டிவிட ஏதாவது வழியுண்டா என்று பார்ப்பார்கள். 'உனக்கேன் கொடுக்க வேண்டும் கிஸ்தி?' என்று வீரபாண்டிய கட்டபொம்மன் அவதாரம் எடுத்து வீர உரை நிகழ்த்துவோரும் உண்டு.

இத்தகையவர்கள் விஷயத்தில் இ.டி.ஏ. கருணை காட்டுவதே கிடையாது. முறைப்படி கேட்பார்கள். கொடுத்தால் சரி. கொடுக்காவிட்டால் எச்சரிக்கை போகும். அப்போதும் பலனில்லை என்றால், தொலைபேசி வழி நேரடி மிரட்டல் அல்லது எச்சரிக்கை. அப்போதும் மசியவில்லை என்றால் வேறு வழியில்லை என்று முடிவு செய்துவிடுவார்கள்.

சம்பந்தப்பட்ட தொழிலதிபரின் வீடு, ஆபீஸ் விவரங்கள் சேகரிக்கப்படும். குழந்தை குட்டிகள், பெண்டாட்டி, அல்லது பெண்டாட்டிகள், பெற்றோர், சொத்து விவரம் உள்ளிட்ட அனைத்தும் தகவலாகச் சேகரிக்கப்படும். எங்கே அடித்தால் அவருக்கு வலிக்கும் என்று கண்டுபிடித்து அங்கே அடிப்பார்கள்.

கடத்தல். ஆம். இ.டி.ஏ.வின் மிக முக்கியத் திருவிளையாடல் அது. கடத்திக் கொண்டு போகிற நபரின் குடும்பத்திடமிருந்து குறைந்தது ஐந்து வருடத்துக்கான முழு வரியையும் மொத்தமாக வசூலிக்காமல் விடுவதில்லை! அப்படியும் பணம் கிடைக்காவிட்டால் கொன்று கடாசிவிடுவார்கள். கொன்ற பிறகு உடல் உரியவர்களுக்கு வேண்டுமென்றால் கண்டிப்பாகப் பணம் கொடுத்துத்தான் தீரவேண்டும்!